கந்தகத் திணை

# குழந்தை நாடகம்

மின் - நூல்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)
சிவகாசி

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
சிவகாசி – 626 124

இணைந்து உருவாக்கும்
மின்-நூல் **(E-book)**


# கந்தகத் திணை

(புதியதோர் உலகம் செய்வோம்)

**(2015 - 2016)**

# குழந்தை நாடகம்


## இரா. அன்னலட்சுமி

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை**

# அஃறிணைகளின் குரல்

ஒருவரைப்போல மற்றொருவர் நடித்துக்காட்டும் கலையாம் நாடகக் கலைக்கு என்றென்றும் ஆயிரம் ஆயிரம் ரசிகர் குழாம் உண்டு. குழந்தைகளுக்கான நாடக மொழியும் நாடகக் கருவும் சமூக நாடகங்களிலிருந்து வேறுபட்டுப் பயணிக்கின்றன. பேசாத உயரினங்களைப் பேசவிட்டு நாடக மாந்தர்களாக்கி குழந்தைகள் களிக்கும் வண்ணம் “எறும்பின் ஆசை” நாடகக் களம் உருவாக்கப் பெற்றுள்ளது. எறும்பும் குரங்கும் யானையும் பேசும் உரையாடல்கள் உயிருக்கு மகிழ்வூட்டுகின்றன சிந்தனைக்கு அறிவு ஊட்டுகின்றன.

குழந்தை நாடக மொழியைத் தூரிகையில் தோய்த்து குழந்தைகளின் கரங்களில் தவழவிட்டுள்ளார் முனைவர் பட்ட ஆய்வாளர் இரா. அன்னலட்சுமி அவர்களின் எழுத்தாசை, நாடகமொழியாகி நம் கண்முன் மலர்ந்து நிற்கின்றது. குழந்தை வாசகர்களே! நீங்கள் அஃறிணைகளின் குரலினை செவிமடுத்துத் தமிழ்மணம் கமழக் கமழ நாடகம் நுகர்க.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு வை. அய்யன் கோடீஸ்வரன் அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு கி. அபிரூபன் அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் வ. பாண்டியராஜன் அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் செ. அசோக் அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. சிவனேசன் அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ், B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**
ஒருங்கிணைப்பாளர், **கந்தகத்திணை.**

# பொருளடக்கம்


| வ. எண் | படைப்பு | படைப்பாளர் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எறும்பின் ஆசை | இரா. அன்னலட்சுமி | 1 |

# எறும்பின் ஆசை

காட்சி - 1

இடம் : காடு
பங்குபெறுவோர் : எறும்பு, குரங்கு



எறும்பு: நான் ஏன் இவ்வளவு சிறிய உயிரினமாக இருக்கின்றேன். பறவைகளைப்போல் உயரமான இடத்தில் இருந்து நீர்வீழ்ச்சிகள், பலவண்ண மலர்கள், பலவகையான கனிகள் இவற்றை எல்லாம் பார்க்க முடியவில்லையே... ஆனால் பார்க்க வேண்டும் போல இருக்கிறதே... என்ன செய்வது? (கவலையோடு அமர்ந்திருந்தது)

குரங்கு: என்ன நண்பனே... கவலையோடு இருக்கிறாய்?

எறும்பு: ஒன்றும்... இல்லை...

குரங்கு: இல்லையே... ஏதோ இருக்கிறது. உன் முகத்தைப் பார்த்தால் தெரிகிறது... என்ன என்று சொல். என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்... (எறும்பு மனவருத்தத்தைக் கூறியது)



குரங்கு: ம்ம்ம்ம்... இவ்வளவு தானா...? இதற்காகவா இவ்வளவு கவலை... நண்பா! உனக்காக இதைக் கூடவா செய்யமாட்டேன்...


எறும்பு: என்ன செய்யப் போகிறாய் ?

குரங்கு: நம் காட்டில் எனக்குத் தெரிந்தநண்பன் ஒருவன் இருக்கிறான்... அவன் மிகவும் உயரமானவன்... அவனைச் சென்று நாளை பார்ப்போம்... உன் கவலை தீர்ந்தது என்று நினைத்துக்கொள்...

எறும்பு: ஆ... உயரமானவரா?
(கனவில் மூழ்கியது)

காட்சி - 2

இடம் : காடு
பங்குபெறுவோர் : எறும்பு, குரங்கு, யானை



குரங்கு: அண்ணா... வணக்கங்கண்ணா ! நான் உங்கதம்பி வந்திருக்கேண்ணா...

யானை: வா ! தம்பி வா ! என்ன இந்தப் பக்கம்.

குரங்கு: எனக்குத் தெரிந்த எறும்பு நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு உயரமாக இல்லையே என்ற கவலை. உயரமான இடத்திலிருந்து பூமியை வலம் வர வேண்டுமாம்... அதற்கு நீங்கள் தான் உத வேண்டும்.

யானை: அவ்வளவுதானா, அந்த எறும்பு எங்கே?

குரங்கு: உங்களைப் பார்க்க வேண்டுமென்று அந்த உயரமான மரக்கிளையில் ஏறி இருக்கிறான். பாருங்களேன்...




**எறும்பு:** யானையாரே... நான் தான் அந்த எறும்பு...

**யானை:** நீதானா அது... இந்த உலகத்தில் மனநிம்மதியோடு வாழ்ந்து இறந்தவங்கன்னு எந்த உயிரினமும் இல்ல! எனக்கும் தான் நிறைவேறாத ஆசைகள் இருக்குது... இந்தக் குரங்கு போல உடம்பு லேசாகி மரத்துக்கு மரம் தாவி விளையாடனும்... அந்தப் பறவைகளைப்போல இறக்கை முளைத்து வானத்தில் பறக்கணும்னு ஆசை... ஆனால் முடியாதே... நீயாவது மரத்து மேலே ஏறி நிற்கிறாய். ஏதாவது ஒரு பறவை மேலே ஏறிக்கிட்டேன்னா வானத்தையே சுற்றிவர முடியும்... ஆனா... என்னால அதெல்லாம் முடியுமா ? சொல்லேன்.

**குரங்கு:** உண்மைதான் அண்ணா... எறும்பின் ஆசைகளை உங்களால தீர்த்து வைக்க முடியும். ஆனால் உங்களோட ஆசைகளை யாரால் தீர்த்து வைக்க முடியும்?

**எறும்பு:** நான் என் தவறை உணர்ந்துட்டேன் அண்ணா... கடவுள் எனக்கு நிறைய வரம் கொடுத்திருக்கார். நான் அதையெல்லாம் நினைத்து மகிழ்ச்சி அடையாம இல்லாததை நினைத்து ஏங்கித் துன்பப்பட்டேன். இனிமேல் எப்பவும் மகிழ்ச்சியாக இருப்பேன்.
(எறும்பும்... குரங்கும்... யானையும் மகிழ்ச்சியாக ஆடிப் பாடிச் சென்றன)



**ஆக்கம் : இரா. அன்னலட்சுமி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**(தமிழ்)**

# நன்றி

